# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.73/2024

dated : 21.04.2025

D.W.1

Name ஆறுமுகச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2018-2019 ஆண்டுகளில் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கடையநல்லூர் வட்டாட்சியர் கண்காணிப்பில் திருவிழா நடைபெற்றது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த நீதிப்பேராணை வழக்கு எண்.20275/2018ல் பிறப்பித்த உத்தரவுப்படி கடையநல்லூர் வட்டாட்சியர் கோவில் திருவிழாக்களை நடத்த வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்தரவுப்பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் இந்த விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். 2019ம் ஆண்டிற்கும் அதே போல் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் அதுபோன்ற திருவிழா நடக்கவில்லை. 2019ம் ஆண்டு யாரால் திருவிழா நடத்தப்பட்டது என்று முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். வடகாசியம்மன் கோவில் திருவிழா, புரட்டாசி மாத திருவிழா, முருகன் கோவிலுக்கான மாசிமகத்திருவிழா ஆகியவை அடங்கும்

என்றால் சரியல்ல. முருகன் கோவில் திருவிழாவிற்கு மூன்று மகமையும் சேர்ந்து நடத்துவார்கள். ஆனால் 7 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. புரட்டாசி மாதத் திருவிழாவை வாதி பிரதிவாதிகள் நடத்துவார்கள். சுடலைவீரன் திருவிழாவையும் வாதி பிரதிவாதிகள் நடத்துவார்கள். பழனிச்சாமி நாடார் தாக்கல் செய்த நீதிப்பேராணை வழக்கையும் சேர்த்து மாசிமகத் திருவிழாவை நடத்த உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி மாசி மகத் திருவிழா நடைபெற்றது என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் முருகன் கோவில் திருவிழா நடைபெறவில்லை என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2019 ஆண்டுக்கு பின்னர் திருவிழாக்கள் நடத்துவது சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். 2019 ஆண்டுக்கு பின்னர் நடந்த திருவிழாக்களின் செலவு விவரங்களை எங்கள் தரப்பிற்கு நகல் வழங்கப்பட்டு அதை நாங்கள் சரிபார்த்து எங்கள் பங்கிற்குரிய தொகையை வாதிகளுக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 2022 ம் ஆண்டில் முருகன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆனால் எங்கள் மகமை சார்பாக நடத்தப்படவில்லை. தனியே நன்கொடை பிரித்து நடத்தினார்கள். அந்த விவரத்தை என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறாததற்கு தனியே காரணம் ஏதும் இல்லை. 3 ம் பிரதிவாதிதான் கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அது தள்ளுபடியானது

என்றால் சரிதான். கோவில் நிர்வாகத்தில் வரவு செலவுகள் மற்றும் கோவில்களின் சாவிகள் நாளது தேதி வரை வாதி நிர்வாகத்தின் வசம்தான் உள்ளது என்றால் சரிதான். அமைதி கூட்டத்தின் முடிவு படி எங்களிடம் தரவில்லை. அந்த அமைதி கூட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க காவல்துறையினரிடம் மனு கொடுத்தோம். அவ்வாறு மனு கொடுத்த விவரத்தை என் முதல் விசாரணை வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரிதான். அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.13, 14 ஆவணங்கள் 2011ம் ஆண்டு வரையான காலத்திற்குரியது. 2015ம் ஆண்டிற்கு பிந்தைய வரவு செலவு கணக்குகள் எங்கள் வசம் உள்ளது அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2015ம் ஆண்டுக்குபின்னர் எங்களிடம் எந்த கணக்கும் இல்லை என்றும் அதனால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.12 ஆவணம் 2019 ஆண்டுக்கு பின்னர் துவங்கும் என்றால் சரிதான். 2015க்கு பின்னர் 2019 வரை பி.சா.ஆ.12 போன்ற ஆவணத்தை நாங்கள் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களிடம் அதுபோன்ற ஆவணம் இல்லை என்றும் அதனால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முருகன் கோவிலுக்கான கதவு எண்.2/129 ஆகும். வடகாசியம்மன் கோவில் கதவு எண்.2/188 ஆகும். சுடலைவீரன் கோவில் கதவு எண்.3/28 ஆகும். பி.சா.ஆ.5 முதல் 8 மேற்கண்ட கதவு எண்ணிற்குரியதல்ல என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்களில் மேலே

கண்ட கதவு எண் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அரியநாயகிபுரம் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றினார் என்றால் சரிதான். அவர் 2015ம் ஆண்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு 2019ம் ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். அது பொய் வழக்கின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். 3ம் பிரதிவாதி சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் குற்றச்சரித்திர பதிவேட்டில் கண்காணிப்பில் உள்ள நபர் என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணத்தின்படி தாவா கோவில்களை நிர்வாகம் செய்வதற்காக மகமை மூலம் ஊர்க்கமிட்டி அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஊர்க்கமிட்டி நிர்வாகத்தை நானும் ஏற்றுக்கொண்டு 2015-2016ம் ஆண்டு கோவில் திருவிழாக்களில் எங்கள் தரப்பு கலந்து கொண்டது என்றால் சரியல்ல. பள்ளி நிர்வாகம் தொடர்பான காழ்ப்புணர்ச்சி காரணமாக ஏற்பட்ட பிரச்சனையின் அடிப்படையில் 2015-2016 ஆண்டுகளில் முதல் தகவலறிக்கை பதிவு செய்யும் நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ,14 அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஊர்க்கமிட்டி நடவடிக்கைகளுக்கு எதிராக 3ம் பிரதிவாதிதான் வழக்குகள் தொடர்ந்து அதனடிப்படையில் அமைதிக்குழு அமைக்கும் நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பின்னர் ஊர்க்கமிட்டி பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு மகமை வாதி சங்கத்தின் பொறுப்பில் நிர்வாகத்தை ஒப்படைத்தது என்றால் சரியல்ல. ஊரில் உள்ள பெரும்பாலான எங்கள் சமுதாய மக்கள் வாதி சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர் என்றும் அதனடிப்படையில்தான் வாதி

சங்கம் ஊர்திருவிழாவை நடத்தி வருகிறது என்று சொன்னால் சரியல்ல. தனிப்பட்ட விரோதம் காரணமாக 3ம் பிரதிவாதி உயர்நீதிமன்றத்தை நாடி வட்டாட்சியர் மூலம் திருவிழா நடத்த ஏற்பாடு செய்தார் என்றால் சரியல்ல. ஊர்மக்களின் பிரதிநிதி என்ற முறையில் வாதி சங்கம்தான் 2019 முதல் நாளது தேதிவரை ஊர்த்திருவிழாக்களை நடத்தி வருகிறது என்றால் சரியல்ல. தற்போதும் நாங்கள் ஊர்மக்களின் மகமையின் முடிவுக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டு முதலே எங்களின் தனிப்பட்ட விரோதம் காரணமாக மகமை மற்றும் வாதி சங்கத்தின் நிர்வாகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆதியிலிருந்து எங்கள் வகையாட்களும், தற்போது நாங்களுமே கோவில்களை நிர்வாகம் செய்து வருகிறோம் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் கூறாத சங்கதிகளை முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் எங்கள் எதிர்வழக்குரைக்கு பொருத்தமான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. எனவே வாதி கோரும் பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.21 17:28:03 +0530